இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 200 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 18 – திங்கள்கிழமை 02 மார்ச் 2026 – சென்னை 32 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 200 : Thiruvalluvar Year - 2057 - Maasi 18 - Monday 02 March 2026 - Chennai 32 Pages ₹ 5.00





செ.ம.தொ.இ / 251 / வரைகலை / 2026

உழவர் வாழ்வை உயர்த்தும் ஸ்டாலின் அரசு!

- 2 இலட்சம் விவசாயிகளுக்கு புதிய இலவச மின் இணைப்புகள்
- நிகர சாகுபடி பரப்பு நான்கே ஆண்டுகளில் 2.05 இலட்சம் எக்டர் உயர்வு
- 16.22 இலட்சம் மெட்ரிக் டன் உயர்ந்து உச்சம் தொட்ட உணவு தானிய உற்பத்தி

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம்!!



வெல்வோம் ஒன்றாக!


## தமிழும் தமிழ்நாடும் நம் உயிர் என காத்திட

# சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை முறியடித்திடுவோம்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் செய்தியில் உறுதி!



**சென்னை, மார்ச், 2-**

**‘‘சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அறிவுத் திறத்தால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடித்திட வேண்டும்” என்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பிறந்த நாளையொட்டி விடுத்த செய்தியினை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**தமிழும் தமிழ்நாடும் நம் உயிர்!**

**அவற்றைக் காப்பது நம் கடமை!**

உழைப்பைத் தவிர வேறொன்று அறியேன் எனச் சொல்லி, இளமை முதல் 73-ஆம் வயது காணும் இந்நாள் வரையில், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணியாற்றுவதே என் வாழ்நாள் கடமை எனச் செயலாற்றி வருகிறேன்.

தமிழும் தமிழ்நாடும் தலைநிமிர்ந்த வரலாற்றில் நான் சிறுதொண்டனாய் இருந்தாலும், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் பெருந்தொண்டாற்றிடவே நினைக்கிறேன்.

அந்த உறுதியோடுதான், Dravidian Model-இல் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி, முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

**இந்தியாவின் தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு!**

உலகம் திரும்பிப் பார்க்கும் வகையில், இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியிருக்கிறேன்.

கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் போய்ச் சேர்ந்துள்ளது திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களும், சாதனைகளும்!

தனிக்குணம் கொண்ட தமிழர் தலைநிமிர்ந்து வாழ்கின்றனர்; நாட்டிற்கே புத்தொளியை வழங்குகின்றனர் என்று புகழும் வகையில் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது!

**யாரிடமும் எதற்காகவும் தாழக்கூடாது!**

நம் தமிழினத்தின் இலட்சியப் பயணத்தில், நம் கால்கள் பாதை மாறக் கூடாது; நம் தலை யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது!

சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அறிவுத் திறத்தால் - நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடித்திட வேண்டும். இதற்காக என்னை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்வேன்.

இதுவே என் பிறந்தநாள் உறுதிமொழி!

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க்குணத் தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.






வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

ரூ.1,261 கோடியில்

5,367 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் திறப்பு,
1,984 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு
அடிக்கல் நாட்டுதல்

மற்றும்

பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு ஆணைகள்
வழங்கும் விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

முன்னிலை

திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள்
மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

செ.ம.தொ.இ / 250 / வரைகலை / 2026







நாள்: 2.3.2026, திங்கள்கிழமை

நேரம்: காலை 11.30 மணி
டாக்டர் தாமஸ் சாலை,
தேனாம்பேட்டை, சென்னை

நேரம்: காலை 12.00 மணி
குயில் தோட்டம்,
மயிலாப்பூர், சென்னை

நேரம்: காலை 12.30 மணி
கோட்டூர்புரம்,
சென்னை.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம்!

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009